பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 29 வியாழக்கிழமை (14-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 271

# வவுனியா கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்!

## ஊடுருவியுள்ளதாகச் சந்தேகம்

வவுனியா, நவம்பர் 14

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் அதிகரித்திருக்கின்றது.

கடந்த சில நாட்களில் இப்பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பல முறை தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள்.

வவுனியாவில் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் அதிகரித்திருப்பது பற்றிய தகவலை வவுனியாவில் இருந்து செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே பி. பி. ஸியின் சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

இம் மாதத்தில் இதுவரை வவுனியாவில் சிவில் நிர்வாகம் இடம் பெறும் பகுதிகளில் எட்டு முறை புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள்.

ஆயுதம் தரித்த புலிகள் அணி ஒன்று சமயபுரம் கிராமத்தின் ஊடாக நேற்றுச் சென்றுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர்களை விடுவிக்க வற்புறுத்தல்!

### கொழும்பில ஆர்ப்பாட்டம்

இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்களை விடுதலை செய்யக்கோரி நேற்று முன்தினம் மாலை கொழும்பில் கோட்டை ரயில் நிலையம் முன் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட சுமார் 150 க்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் உறவினர்களும், கடற்றொழில் அமைப்புக்களுமே மேற்படி ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தியச் சிறைகளில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (உ-8)

## தமிழக மீனவர் மீது தாக்கு; சீறுகின்றார் கருணாநிதி

சென்னை, நவ. 14

தமிழக மீனவர்கள் எந்த விதக் காரணமுமின்றி இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்து இந்திய மத்திய அரசும், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகமும் இலங்கை அரசிடம் கடும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி

நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர், இத்தகைய கோரிக்கையை இந்திய அரசிடம் தாம் வலியுறுத்தித் தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பில் தாக்குதல் பத்துப் புலிகள் மரணம்?

கொழும்பு, நவ 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலங்கரைச்சி பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் குழு ஒன்றின் மீது இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்றும்—

இத்தாக்குதலில் தமது உறுப்பினர்கள் 10 பேர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகளின் வானொலி அறிவித்தது என்றும்—

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று தெரிவித்தது (உ-3)

## இராணுவத்துக்கு ஆள் திரட்ட நடமாடும் நிலையங்கள்

கொழும்பு, நவ. 14

இராணுவத்திற்குப் படையினரைத் திரட்டுவதற்காக நடமாடும் ஆள் சேர்க்கும் சேவைத்திட்டம் ஒன்று அடுத்த வாரத்தில் இருந்து நாடெங்கும் கிராம மட்டத்தில் நடத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ''தினமின'' நாளிதழ் தெரிவிக்கிறது.

இதற்கிடையில் இராணுவத்தில் சேர்வதற்காக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் அனைவருக்கும் பிரயாணச் செலவினமாக 500 ரூபா வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியாளர் இடைநீக்கம்

கொழும்பு, நவ. 14

நேற்றிரவு நாடு கடத்தப்பட்ட 4 டென்மார்க் பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி செய்தியாளர்கள் ஆகியோருடன் அடிக்கடி தொடர்புகளை வைத்திருந்தார் எனக் கூறப்படும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியாளர் ஒருவர் நேற்று முன்தினம் சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-2)

## வவுனியாவில் வடக்கு அகதிகள் நிலை: இன்று நாடாளுமன்றில் விவாதம்

கொழும்பு. நவ. 14

வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாவுக்கு வந்திருக்கும் மக்கள் நடமாட முடியாத வகையில் அங்கு அகதிமுகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளது குறித்தும் —

இவர்களைத் தங்க வைப்பதற்கான அகதிமுகாம்களாக வவுனியாப் பாடசாலைகளை மாற்றியதனால் வவுனியாவில் மாணவர்கள் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும் —

நாடாளுமன்றத்தில் இன்று மாலை சபை ஒத்தி வைப்பு வேளையில் விவாதம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

இத்தகைய விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடந்த நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கோரிக்கைக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான ஐ தே கவும் குரல் கொடுத்ததாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கில் இருந்து போர் நிலைமைகள் காரணமாக வன்னிக்கு இடம் பெயர்ந்த லட்சக்கணக்கான தமிழ் மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் உண்ணாவிரத முஸ்தீபு: அமைச்சர் பீரிஸுடன் கூட்டணி பேச்சு

கொழும்பு, நவ. 14

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ச் சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், செ. செல்வராசா, சி. துரைராஜசிங்கம் ஆகியோர் நேற்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான ஜி. எல். பீரிஸ், சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சு பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சு நடத்தவிருந்தனர்.

மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் களுத்துறை சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைப் பார்வையிட்டனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்த அறிக்கை விவரம் வருமாறு:

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை பிரச்சினைகள் தொடர்பாக அவர்களை நேரில் சந்தித்துப் பேசினோம்.

மொத்தம் 195 தமிழ்க் கைதிகள் இச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், அவசரகாலச் சட்டத்தின் கீழும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும் பாலானோர்கள் 18 மாதங்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 4 டென்மார்க் பத்திரிகையாளர்களும் நேற்றிரவு நாடு கடத்தப்பட்டனர்!

லண்டன், நவ. 14

சர்ச்சைக்குரியவர்கள் எனக் கருதப்பட்ட நான்கு டென்மார்க் பத்திரிகையாளர்களையும் இலங்கை அரசாங்கம் நேற்று இரவு நாடு கடத்தியது.

சட்டவிரோதமாக டென்மார்க்குக்குள் வந்தவர்கள் என குறிப்பிட்டு சென்ற வாரம் டென்மார்க் அதிகாரிகளால் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட சித்திரா ராஜேந்திரன் என்ற தமிழ்ப் பெண்ணைப்பற்றி அறிவதற்காகவே இந்த நான்கு டென்மார்க் பத்திரிகையாளர்களும் இலங்கை வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தான் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பவர் என இலங்கை அரசு சந்தேகிப்பதால் இலங்கைக்கு தான் திருப்பியனுப்பப்பட்டால் தமக்கு இன்னல்கள் ஏற்படும் என அந்தப் பெண் டென்மார்க் அரசிடம் கூறியிருந்தார்.

அவர் இலங்கைக்கு திரும்பியவுடன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவு பயிற்சி பெற்றவர்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண, உயர் பிரிவு பயிற்சி பெற்றவர்களை கூட்டுறவுச் சங்கங்கள் பணியாளர்களாக நியமிக்க, பெயர்ப் பட்டியலைசபையிடம் கோரிவருவதால் பயிற்சி பெற்று வேலை வாய்ப்புப் பெறாதவர்கள் கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து 21 - 11 - 96 - க்கு முன்னர் மாவட்ட கூட்டுறவுச் சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவட்டச் செயலாளர்,
மாவட்டக் கூட்டுறவுச் சபை,
யாழ்ப்பாணம்.

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/3484)

# தலைமைத்துவப் பயிற்சி மூலமே நற்பிரஜைகளாகத் திகழ முடியும்

### பயிற்சிக் கருத்தரங்கில் பதில் துணைவேந்தர் உரை

''எதிர்காலச் சந்ததியினராகிய இன்றைய மாணவர்கள் சிறந்த தலைமைத்துவப் பயிற்சிகளையும் —

முகாமைத்துவப் பயிற்சிகளையும் —

பெற்றுக்கொள்ளும்போது தான் எதிர் காலத்தில் நாட்டுக்கு உகந்த சிறந்த நற்பிரஜைகளாகத் திகழ முடியும். வாழ்க்கையின் இலட்சியத்திலும் வெற்றி பெற முடியும்.''

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வடமராட்சிப் பிரதேச உயர்தர வகுப்பு மாணவர்களுக்கென நடத்தப்பட்ட ''தலைமைத்துவமும் முகாமையும்'' என்ற இருநாள் பயிற்சிக் கருத்தரங்கின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக் கழக முகாமைத் துறையினரால் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வடமராட்சிப் பிரதேச சிவில் நிர்வாக இணைப்பதிகாரி கேணல் எல். ஏ. ஆர். விஜயரட்ண ஆகியோர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துறைத் தலைவர் மா. நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:

மக்கள் மத்தியிலே தலைமைத்துவப் பண்புகளும் முகாமைத்துவப் பண்புகளும் சிறந்து விளங்கும்போது தான் மக்கள் சிறப்பாக வாழ்ந்து நாட்டைச் சுபீட்சப்பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

எமது பிரதேசத்தில் இயற்கை வளங்கள், மனித வளங்கள் நிறைய உள்ளன.

இயற்கை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்கு மக்கள் மத்தியில் தலைமைத்துவப் பண்புகள் வளர்க்கப்படுவதுடன் மக்களின் கல்வியறிவும் மேம்படுத்தப்படுகின்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கு மாணவர் சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வழி சமைப்பதாக அமையும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு இதுபோன்ற சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருக்கின்றன. ஆதலால் இது போன்ற சந்தர்ப்பங்களை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். தொழில்திணைக்கள அதிகாரி ஏ.பசுபதி ''ஆளுமை அபிவிருத்தி'' என்றதலைப்பிலும் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துறைத் தலைவர் மா. நடராஜசுந்தரம் ''முகாமைத்துவம் ஒரு புதிய விஞ்ஞானம்'' என்ற தலைப்பிலும் விரிவுரையாளர் கே. சுப்பிரமணியம் ''தலைமைத்துவம்'' என்ற தலைப்பிலும், யாழ். கல்வித்திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ். வரதராஜா ''வகுப்பறைத் தலைமைத்துவம்'' என்ற தலைப்பிலும் உரையாற்றியதுடன் பாடசாலை அதிபர் மு. ஸ்ரீபதி விரிவுரையாளர் த. கலாமணி ஆகியோரும் உரையாற்றினார்கள். (இ)

## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பு சின்னத்தம்பி சிவப்பிரகாசம் (K. C. சிவப்பிரகாசம்)

(இளைப்பாறிய தொழிற் திணைக்கள இலிகிதர்)

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தப்பு சின்னத்தம்பி சிவப்பிரகாசம் அவர்கள் 12 - 11 - 1996 செவ்வாய்க்கிழமை மாலை அமரத்துவமெய்தினார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், பரமநாதன் (வைத்திய கலாநிதி U K), சிதம்பரநாதன் (கணக்காளர் U K), தியாகநாதன் (U K), யோகநாதன் (கணக்காளர் U.K), இராசநாதன் (UK.), சற்குணநாதன் (U.K), காலஞ்சென்ற ரஞ்சினி (U.K), ஆகியோரின் அன்புத்தந்தையும் காஞ்சனா (U K), சாந்தி (U.K), சுகந்தி (U.K) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13 - 11 - 1996 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் புலோலி சுப்பர்மடம் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு இத்தால் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. பொன்னம்மா
(மனைவி)

புலோலி மேற்கு,
புலோலி. (43643)

### திருமதி முருகேசு செல்லம்மா

அளவெட்டி வடக்கு, பெரிய கிணற்றடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஆ. முருகேசு அவர்களின் அன்பு மனைவி திருமதி முருகேசு செல்லம்மா 13-11-1996 இல் காலமானார்.

இவர் திரு மு. சிவப்பிரகாசம் (பொது முகாமையாளர் யாழ். ப. நோ. கூ. சங்கம்) திருமதி க. நகுலாம்பிகை, திருமதி ச. திலகவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தரத்தினம், சதாசிவம், நாகேஸ்வரி (கருணா) ஆகியோரின் மாமியும், சஜராகவன், அழகேசன், ராதேயன் திருமதி ராஜா ஜி. ஜெயகௌரி (இந்தியா) சத்தியா, கோதை, பிரணவன், சஞ்சயன், சான்றோன், சாதுரியன், சாயீசன் ஆகியோரின் பேர்த்தியும், நித்திலனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14-11-96 வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் 20/3, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
மு. சிவப்பிரகாசம்
(மகன்)

(43639)

### திருமதி சின்னையா அன்னபாக்கியம்

கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னையா அன்னபாக்கியம் 10-11-96 இல் கரியாலை நாகபடுவானில் காலமானார்.

அன்னார் மண்டைதீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னையா அவர்களின் அன்பு மனைவியும், சச்சிதானந்தம், திருநாவுக்கரசு, சண்முகநாதன், லீலாவதி, புஷ்பராணி, இந்திராணி, சாந்தினிதேவி, ஜீவானந்தன், ரதிதேவி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலா, சரோஜினி, அகிலத்திருநாயகி, இராஜலிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம், நவரட்ணராஜா, சாந்தினி, சிவலோகநாதன் ஆகியோரின் மாமியாரும், சிவரெத்தினம், குணரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவர்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 10-11 96 அன்றே நாகபடுவானில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தகவல்:
து. இராஜலிங்கம்
(மருமகன்)

சபாபதி வீதி,
தலையாழி,
கொக்குவில். (8973)

## சமய தீட்சை

கொழும்புத்துறை, நவ. 14

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியில் இருந்து நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்களால் சிவ தீட்சை வழங்கப்பட உள்ளது. ஏழு வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தீட்சை பெறலாம். (உ-ரி)

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஐப்பசிக் கடைசி வெள்ளி தினமான நாளை காலை 9 மணிக்கு சிவ தீட்சை ஆதீன முதல்வர் தலைமையில் நடைபெறும். (அ-30)

## போட்டி

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையின் நூற்றாண்டு விழாவை ஒட்டி பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் மாணவருக்கான வினாப் போட்டி ஒன்றை நடத்துகின்றது. இப்போட்டியில் ஜி சீ ஈ. உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்குபற்ற முடியும். (உ-ரி)

## பெற்றுக் கொள்ளவும்

சாவகச்சேரி சந்திக்கும் எரிபொருள் நிலையத்திற்குமிடையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப்பணம் சாவகச்சேரி ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (சி/3499)

## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து ஆசீர்வாதம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் சவரிமுத்து ஆசீர்வாதம் 12 - 11 - 1996 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும், ஜேம்ஸ் (கனடா), செபஸ்ரியாம்பிள்ளை (கனடா), ஆகியோரின் சகோதரரும், மரியதாஸ் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), கிறேஸ்மேரி (சிங்கப்பூர்), விக்டர் இம்மானுவல் (முன்னாள் விக்ரர் அன்சன்ஸ், ஆஸ்திரேலியா), தேவசகாயம் (குணம் — முன்னாள் நியூ விக்ரேர்ஸ், ஆஸ்திரேலியா), யூஜீனியா (கிளி — லண்டன்) ஞானரெத்தினம் (குயின் — ஆஸ்திரேலியா), தேவரட்டினம் (லண்டன்), யோகரத்தினம் (பிள்ளை -- லண்டன்), ஜெயரட்ணம் (ஆஸ்திரேலியா), அன்புமணி (மணி — ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஜெயமணி (ராசாத்தி), காலஞ்சென்ற தம்பிரட்ணம் (சிங்கப்பூர்), தயா (ஆஸ்திரேலியா), றெமி (ஆஸ்திரேலியா), ஜெயப்பிரகாசம் (லண்டன்), ஜெயசிங்க (ஆஸ்திரேலியா), கிறிஷி (லண்டன்), பரராஜசிங்கம் (லண்டன்), சுகுணா (ஆஸ்திரேலியா), ஆனந்தராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல: 161, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து இன்று 14-11-96 வியாழக்கிழமை மாலை (புதிய நேரம்) 3.00 மணிக்கு மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்பு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மரியதாஸ்
(மகன்)

''டாஸ் கொம்ப்ளெக்ஸ்,''
161, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (43644)

### வேலுப்பிள்ளை திரவியம்

பாடசாலை வீதி, ஆறுகால் மடம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரான வேலுப்பிள்ளை திரவியம் 06 - 11 - 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திருமதி வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திரேசாவின் அன்புக் கணவரும், தவநேசன் (இத்தாலி), சாந்திபவானி (கொழும்பு), வதனி (கனடா), காந்தரூபன் (இத்தாலி), எமில்டரூபன், மாலினி, சயந்தரூபன் (இத்தாலி), விமலரூபன் (மாணவன், யா/கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலக்கியாஸ் (இத்தாலி), கருணாகரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தையா, காலஞ்சென்ற சோமு, பூமணி, பரமேஸ்வரி, சிவமணி, துரைரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பெரியதம்பி (சிற்றி மெடிக்கல், யாழ்.), சின்னத்தம்பி, செல்லம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பவுண், செல்லம்மா, இராசமணி, சின்னத்துரை மற்றும் சின்னத்துரை, இராசலிங்கம் (பூச்சி), தங்கமலர், பிராங்கி, லீனப்பு, றீற்றா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 14 - 11 - 96 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கரையாம்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வே. துரைரத்தினம்
(சகோதரன்)

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (43640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அகதி முகாம் நிலைமை எமக்குக் கவலை அளிக்கிறது!

## ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் ஜனாதிபதிக்குக் கடிதம்

வடக்கிலிருந்து வவுனியா வந்து சேரும் அகதிகளின் நிலை குறித்து ஈ.பி ஆர் எல் எவ் செயலாளர் கே. பிரேமச்சந்திரன் ஜனாதிபதிக்கு கடிதமொன்று எழுதியுள்ளார்: அக் கடிதத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

''உண்மை வெற்றி - 1'', ''உண்மை வெற்றி - 2'' இராணுவ நடவடிக்கைகளை அடுத்து கிளிநொச்சிப் பகுதியிலிருந்த மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்துள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களுள் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட மக்களும், சூரியப்பிரகாசம் I, II, III இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சிப் பகுதியில் தற்காலிகமாகத் தங்கியிருந்தோரும் அடங்குவர்.

கிளிநொச்சி நகரம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதை அடுத்து போர் நடவடிக்கைப் பிரதேசங்களிலிருந்து வவுனியா நகர் வர முயற்சித்த ஆயிரக்கணக்கானோருக்கு வவுனியாவுக்குள் நுழைவதற்கான அனுமதி ஆரம்பத்தில் இராணுவத்தால் மறுக்கப்பட்டது.

வாழ்க்கையை மேற்கொள்ளத் தேவையான அடிப்படை வசதிகளான உணவு, உறைவிடம், குடி தண்ணீர், மருந்து ஆகியன அப்பகுதியில் இல்லாத காரணத்தினால் ஆளுக்கு 8000 ரூபா வீதம் வள்ளங்களுக்குச் செலுத்தி இந்தியா செல்ல பலர் முடிவெடுத்தனர்.

இவ்வாறு சென்றவர்களில் படகு கவிழ்ந்ததால் சுமார் 20 பேர் நீரில் மூழ்கி இறந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பல்வேறு இன்னல்களுக்குப் பின்னர் தற்போது அகதிகளை வவுனியா வர இராணுவம் அனுமதித்துள்ளது. அரசின் இந்த முடிவை நாங்கள் வரவேற்கும் அதே வேளையில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகளின் வருந்தத்தக்க நிலைமையை எடுத்துக் கூற விரும்கிறோம்.

கடந்த 30 ஆம் திகதியிலிருந்து கடந்த வாரத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் வவுனியா வந்துள்ளனர்.

நாளாந்தம் சுமார் 500 பேர் நகருக்குள் வந்தவண்ணமுள்ளனர். எந்தவித விதிவிலக்குமின்றி அனைவரும் முகாமுக்கு அனுப்பப்படுகின்றனர்.

### மோசமான சுகாதார நிலை

வேப்பங்குளம், நெளுக்குளம் வெளிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளும், வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகக் கல்லூரியும், மேலும் சில பாடசாலைகளும் அகதி முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன.

இந்த முகாம்களில் நிலவும் சுகாதார நிலைமையை விவரிக்க முடியாதுள்ளது. இப்பாடசாலைகளில் 1000 த்துக்கும் மேற்பட்டோரின் பாவனைக்கு 2 அல்லது 3 மலசல கூடங்களே உள்ளன. உணவுச் செலவாக வயதுவந்தோருக்கு நாளொன்றுக்கு 50 ரூபாவும், சிறுவர்களுக்கு 35 ரூபாவும் வழங்கப்படுகிறது. முகாமை விட்டு வெளியே செல்ல அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை தொடர்பாக பின்வரும் விடயங்களை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தத் தமிழ் அகதிகள் வேறுயாருமல்ல; இவர்கள் இலங்கைப்பிரஜைகளே. இத்தீவின் எப்பாகத்திலேனும் வசிப்பதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

எங்கே வாழ விரும்புகிறார்களோ அந்த இடத்தைத் தெரிவு செய்யும் உரிமையும் அவர்களுக்கு உள்ளது. மக்களை முகாம்களில் தங்க வைப்பதும், அவர்கள் போக விரும்பாத இடங்களில் சென்று வாழும்படி கட்டாயப்படுத்துவதும் ஒட்டு மொத்தமான மனித உரிமை மீறல் என்றே நான் நினைக்கிறேன்.

### வருவோர் எல்லோரும் அகதிகளா?

பல்வேறு காரணங்களுக்காக மக்கள் வவுனியா வருகின்றனர். வடக்குக் கிழக்கில் அமைதி உருவாகும் வரை வவுனியாவில் தங்கி தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை அளிக்கவே பலர் விரும்புகின்றனர்.

வேறுசிலர் கொழும்பு சென்று அங்கிருந்து வெளிநாடுகளில் உள்ள தங்கள் பிள்ளைகளுடன் சென்று இணைவதற்காக வவுனியா வருகின்றனர்.

சிலர் மருத்துவ வசதிகளைப் பெற வவுனியா வருகின்றனர்.

ஆனால் இவ்வாறு வவுனியாவரும் அனைவரும் அகதிகள் எனக் குறி சுடப்பட்டு சுற்றிவர முட்கம்பிகள் அடிக்கப்பட்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முகாமில் உள்ளவரைச் சந்திக்க யாராவது சென்றால் முட்கம்பி வேலி ஊடாகவே கதைக்க முடியும். இக்காட்சி ஜெர்மனியில் இருந்த நாஷிகளின் முகாம்கள் பற்றி வெளிவந்த பழைய கறுப்பு வெள்ளைத் திரைப்படக் காட்சிகளை நினைவூட்டுகிறது.

### அனைத்து தமிழர்களையும் பாதிக்கிறது

பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்குள்ள ஒவ்வொரு தமிழரையும் துருவி ஆராய வேண்டிய தேவை அதிகாரிகளுக்கு இருக்கலாம். இருப்பினும் குழந்தைகளையும், கர்ப்பவதிகளையும் கூட அங்கு தங்க வைப்பது சரியான அணுகுமுறையாகாது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நீங்கள் தொடுத்துள்ள யுத்தமானது இந்த நாட்டிலுள்ள அனைத்துத் தமிழர்களையுமே பாதிக்கிறது.

நிலைமைகள் இவ்வாறு இருப்பதால் பின்வரும் நடைமுறைகளைச் செயற்படுத்துமாறு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவை நடைமுறைப் படுத்தப்படின் நீண்ட காலமாக பாதிப்புக்களுக்கு உள்ளான மக்களுக்கு ஓரளவாவது நிவாரணமாக அமையும்.

★ வவுனியா வரும் மக்கள் மீதான விசாரணைகள், சல்லடை போடுதல்கள் துரிதப் படுத்தப்பட வேண்டும். கர்ப்பவதிகள், வயதுபோனோர். மற்றும் குழந்தைகள் ஆகியோர் பற்றி தனியாக கவனம் செலுத்தப்படுவதுடன் அவர்கள் முகாமில் தங்க வைக்கப்படாது விடுவிக்கப்பட வேண்டும்.

★ அரசாங்க ஊழியர்கள், வெளிநாடு செல்பவர்கள் அல்லது பரீட்சைக்கோ, அல்லது நேர்முகப் பரீட்சைக்கோ செல்பவர்களைத் தேவையற்ற விதத்தில் தாமதப் படுத்தக் கூடாது.

★ வேறு தங்குமிட வசதியில்லாமல் தொடர்ந்தும் முகாமில் தங்கவிரும்புவோரைத் தனியான அகதிமுகாமில் வைத்திருக்க வேண்டும்.

★ யாழ்ப்பாணத்துற்கு செல்ல விரும்புவோரை மாத்திரம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறும் இடங்களுக்குத் திரும்புமாறு எவரையும் அதிகாரிகள் வற்புறுத்தக் கூடாது.

★ வவுனியா வருவோர் தொடர்பாக சல்லடை போடும் பணிகள் குறுகிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட வேண்டும். தேவை ஏற்படின் இப்பணிக்கு மேலும் அலுவலர்களை ஈடுபடுத்தல் வேண்டும்.

வவுனியாவிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. 7 ஆயிரம் மாணவர்களுக்கு கல்வி வசதிகள் இல்லை. மாணவர்களில் பலர் இவ்வாண்டு டிசம்பரில் ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். மேற் கூறப்பட்டுள்ள சிபார்சுகள் நடைமுறைப் படுத்தப்பட்டால் பாடசாலைகளை மீளத் திறப்பதற்கும், மாணவர்கள் கல்வியைத் தொடரவும் வசதியாயிருக்கும்.

கௌரவத்துடன் வாழ விரும்புவதே மனித இயல்பு. தமிழ் மக்கள் எந்த வகையிலும் இதற்கு விதிவிலக்கு இல்லை.

எனவே உடைமைகள் அனைத்தையும் இழந்து, பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து, தங்கள் உயிரைப் பாதுகாக்க வவுனியா வந்துள்ள மக்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் வழங்குமாறும், உள்நாட்டு யுத்தம் காரணமாக இன்னல்களை எதிர் நோக்கவுள்ள பிரதேசங்களுக்கு அவர்களை மீண்டும் அனுப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(இ-10)

# யுத்தத்தில் முக்காற் பங்கு தற்போது முடிந்து விட்டது

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 14

'யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற மக்களது ஆணைக்கேற்ப யுத்தத்தில் முக்காற் பங்கை முடித்து விட்டோம்' இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறினார்.

'சுதந்திர இளைஞர் இயக்கத்துக்குத் தயாராகுங்கள்' என்ற தொனிப் பொருளில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 2 ஆவது கட்ட வைபவம் ஒன்றில் ஜனாதிபதி உரை நிகழ்த்தினார்.

இளைஞர்கள் அரசாங்கத்திலும் அதன் கொள்கையிலும் பெரும் அக்கறை காண்பித்து வருகிறார்கள் என்று கூறிய ஜனாதிபதி நாட்டின் அபிவிருத்தியிலும் அரசாங்க நடவடிக்கையிலும் இளைஞர்களின் கூடுதலான பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சுதந்திர இளைஞர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்றார்.

தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு 2 வருடங்கள் பூர்த்தி அடைந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி நாட்டில் வன்செயல்களையும் இன்னல்களையும் ஒழிப்பதற்கு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கே மக்கள் தமக்குப் பெருமளவு வாக்களித்தார்கள் என்று கூறினார்.

(இ-ரி)

# தப்பி ஓடிய படையினரில் 200 பேர் மீண்டும் கைது

கொழும்பு, நவ. 14

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து தப்பியோடிய இராணுவத்தினரில் 200 பேர் மீளவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், குளியாப்பிட்டி, குருநாகல் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதே வேளை — கண்டியில் தப்பி ஓடியவர்களிலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

(இ-3)

# ரெலோ பிரமுகர் ஸ்ரீகாந்தாவின் கருத்துக்கு மக்கள் கடும் விமர்சனம்

## இராணுவ வட்டாரங்கள் அறிக்கை

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக ரெலோ பிரமுகர் ஸ்ரீகாந்தாவினால் வெளியிடப்பட்ட அபிப்பிராயம் யாழ்ப்பாணத்தில்வாழும் பொதுமக்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை யாழ் இராணுவ வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

''கொழும்பில் சௌகரியமான வாழ்க்கை நடத்தும் ஸ்ரீகாந்தா போன்றவர்கள் கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார்கள். இவர்கள் போன்றவர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்குக் கடந்த எத்தனையோ வருடகாலமாக வரவில்லை. நாங்கள் புலிகளின் ஆட்சியில் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தோம் என்பதை இவர்கள் தெரிந்திருக்க மாட்டார்கள். ஸ்ரீகாந்தாவினால் தெரிவிக்கப்பட்ட கருத்து நிலைப்பாடு ஆச்சரியமானதும், அதிருப்தி தரக்கூடியதுமாகும்.''

இவ்வாறு அனுபவம் முதிர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

''புலிகள் எமிகளை எங்கள் இல்லங்களில் இருக்க விடவில்லை. அவர்கள் எமிகளை யாழ். நகரை விட்டு கட்டாயத்தின் பேரில் முதலில் வடமராட்சிக்கும், பின்பு தென்மராட்சிக்கும் போகச் செய்தனர். அதுவும் அல்லாமல் எங்கள் பிள்ளைகளையும் சிறுவர்களையும் எங்களிடமிருந்து பிரித்து பரம்பரையையே பாழடித்துவிட்டனர். அவர்களேதான் ஆயிரக்கணக்கான ரெலோ உறுப்பினர்களைக் கொன்றார்கள் என்பதும் மறக்க முடியாது. இராணுவத்தினர் யாழ்ப்பாணம் வந்த பின்புதான் எங்களுக்கு நம்பிக்கை உதயமாகியுள்ளது'' — இவ்வாறு நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் மனித உரிமை அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் புலிகள் பாலியல் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக அவர்களுடைய அறிக்கைகள் அநேகமாக இரகசியமாகவே அமைவதால் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படுவதில்லை.

எப்படியிருந்தாலும் இராணுவ உயர்பீடம் எடுத்த நடவடிக்கைகள் வரவேற்கத் தக்கவை. அவர்களின் நடவடிக்கையினால் குற்றம் இழைத்தவர்கள் எனக் கருதப்படும் இராணுவத்தினர் நீதிமன்றுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

ஸ்ரீகாந்தாவும் அவரைச் சேர்ந்த தமிழ் மக்களின் தலைவர்களெனக் கூறிக் கொள்ளும் ஏனையோரும் தங்களுடைய எண்ணம் எது என்பதைக் கூறுவதற்கு இவ்வளவு விரைவாக இப்படியான ஒரு முடிவுக்கு வரமாட்டார்கள்.

அவர்கள் உண்மையானவர்களாக இருந்தால் அவர்கள் இங்கு வந்து மக்கள் மத்தியில் வாழ்ந்து, அவர்களின் துன்ப துயரங்களை அறிந்து, புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்க வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோழித் தீவனமாகப் பாவிக்கக் கூடிய அரிசிவகைகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு விநாயகன் களஞ்சியம், குளப்பிட்டி சந்தி, கொக்குவில் (8971)

---

சோபாக் கட்டில், அன்ரனாவும் (யப்பான்). பைப்பும், சிறுவர்களுக்கான உடைகள்' மின் விசிறிகள், பிளாஸ்ரிக் கான்கள், மழைச்சட்டை (பெரியது), பார்வையிடும் நேரம்: பி.ப. 1.00 மணி- 5.00 மணி (பழைய நேரம்). முகவரி: திருமதி கு. ஸ்ரீரஞ்சன், 75 (109) அரசடி வீதி, யாழ்ப்பாணம். (43619)

---

Yamaha Mate 90 model மோட்டார் சைக்கிள் (பெற்றோல்), தொட்டில்கள், சோக்கேஸ், மேசைகள், Desk, கட்டில்கள், சாப்பாட்டு மேசை, கதிரைகள், குளிர்சாதனப்பெட்டி. பார்வையிடும் நேரம்: பி.ப. 1 00 மணி – 5.00 மணி (பழைய நேரம்). முகவரி: திருமதி கு. ஸ்ரீரஞ்சன், 75 (109) அரசடி வீதி, யாழ்ப்பாணம். (43618)

---

வணிகப் புள்ளி விவரவியல் வினாக்கொத்து அலகு 1 – 5 வரையான பகுதி I, II ஐ உள்ளடக்கியதுமாக வெளியிடப்பட்டுள்ளது. Bond கல்வி நிலையம், மது புத்தகசாலை, கொக்குவில் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். தொகுப்பு: க. இராஜேந்திர குமார். (43617)

### தவறிவிட்டது

இ. சிதம்பரநாதனின் 700752577 V இலக்க அடையாள அட்டை காரைக்கால் சிவன் கோயிலடிக்கும், குமர கோட்டம் ஞான வைரவர் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செ. இரத்தினசிங்கம், குமர கோட்டம், கோண்டாவில் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (43632)

---

துரையப்பா இராசநாயகம் என்பவரது 582622922 V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கஜமுகா வர்த்தக நிலையம் (வெற்றிலைக்கடை), இல. 94, மேற்கு மாக்கற், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43623)

---

த சசீகரன் என்பவருடைய அடையாள அட்டை (762751585 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மீசாலை மேற்கு, விக்கினேஸ்வரா பாடசாலையில் அல்லது ஸ்ரீவிநாயகர் பேக்கறியில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். (43630)

---

நவரத்தினம் மகேஸ்வரி (இல. 486132922 V), நவரத்தினம் நாகேஸ்வரி (இல: 466162353 V) அடையாள அட்டைகளும், நிவாரண முத்திரையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்திற்கு அறியத்தரவும். இல: 28, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (சி/3493)

### வரலாறு

வரலாறு (வினா – விடைகள்) டிசெம்பர் O/L 96 பரீட்சார்த்திகளுக்கு மிகவும் உகந்தது. ஆசிரியர்: கே. எஸ். முத்துலிங்கம், சொற்ப பிரதிகளே உண்டு. பூபாலசிங்கம், மக்மிலன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (43610)

### இடமாற்றம்


யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இயங்கி வந்த சில்லாலை– Dr. அல்போன்சஸ் அத்தனாசியார் மருத்தெண்ணெய் களஞ்சியம், 70/2 பழைய பூங்காவீதி, கொய்யாத்தோட்டத்திற்கு இடம் மாறியுள்ளதை அறியத்தருகிறோம். திருமதி கமலினி றஞ்சன். (43634)

## ப. நோ. கூ. ச. விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் விசேட விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துக்கு அண்மையில் சிராம்பியடி லேனில் மணியம் பில்டிங்கில் இந்த விசேட விற்பனை நிலையம் செயற்பட்டுவருகிறது. (இ-4)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 1948 – 04 – 15

உதிர்வு: 1996 – 10 – 15

### அமரர் கந்தையா செல்வராசா

சதி பதியாய் வாழ்ந்தவென்னை சரி பாதியாய் வைத்திருந்தீர்
சதி செய்தே காலன் சரி பாதியில் பிரித்து விட்டான்
பசுவைப் பிரிந்த கன்று போல் தவிக்கின்றான் உம் மகன்
விதி யென்று இருக்கின்றோம் விழிகள் நனைத்திங்கே
விடிவை நாம் காணோம் உம்மை எங்கே நாம் காண்போம்.

உம் பிரிவால் துயருறும்;
மனைவி, மகன், சகோதரர்கள், மாமி,
மைத்துனன்மார், மைத்துனிமார்,
மருமககள், உறவினர்கள்.

கோவிலாக்கண்டி,
கைதடி. (43612)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஆறுமுகம் முருகேசு

மலர்வு: 28–10–1925

உதிர்வு: 27–10–1995

திதி: 14–11–1996

அன்பின் திரு உருவே! அறிவின் சிகரமே!
மின்னல் போல் மறைந்தீர்;
மிகத்துயர் அடைந்தோம்.
ஒரு வருடம் கழிந்தும் ஆற்றாது – எம்மனது
வெந்தனல் போல் எரிகின்றது.
என்றென்றும் மறக்க முடியாத பாச நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்களை நினைவுகூரும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

தகவல்:
கோ. வாமதாசன்,
நயினாதீவு. (43626)

## புறொயிலர் இறைச்சிக் கோழிகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

**துர்க்கா ஸ்ரோர்ஸ்**
இல. 125, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[43637]

## மனித உரிமைகள் செயலணிக் குழு
## (HUMAN RIGHTS TASK FORCE)

பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்
(JAFFNA REGIONAL OFFICE)

## பதவி வெற்றிடங்கள்

1. பிராந்திய இணைப்பாளர் (Regional Cordinator)
   பணிமனைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொலீஸ், இராணுவம் மற்றும் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு அலுவல்களை இணைத்து மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். தடுத்து வைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். முறைப்பாடுகள் குறித்து விசாரித்தறியும் திறமை அவசியம்.
2. விசாரணை உத்தியோகத்தர்கள் (Investigation Officers)
   முறைப்பாடுகளைப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொள்வதுடன் பிராந்திய இணைப்பாளருக்கு உதவியாக இருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
3. பணிமனை அலுவலர்/ பியோன்/ காவலாளி (Office aid/ Peon/ Watcher)
4. இவை முழுநேரப் பணிகளாகும்.
5. விண்ணப்பங்களை ஒரு வாரத்திற்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**CHAIRMAN,**
Human Rights Task Force,
2, Flower Avenue, Colombo - 7.

(சி-3495)

எங்கள் நெஞ்சில் நிறைந்த
சிவபாலன் நினைவாக

## 6-ம் மாத நினைவஞ்சலி



### செல்வன் சிவபாலன் சிவசுந்தரம்

(சிவன் அரிசி ஆலை உரிமையாளர்)

மலர்வு: 09–01–1965

உதிர்வு: 20–04–1996

திதி: 14 – 11 – 1996

குல விளக்குச் சுடர் பரப்பக்
குடி விளங்கும் என்றிருந்தோம்
குல விளக்கை இருள் மூடக்
குடி முழுகிப் போனதடா!
உளமெரிய உயிர் உருக
உனை நினைத்து விழி நனைந்தோம்.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

தந்தை, தாய்,
சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

229, சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி.

(43635)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பொது நூலகம்

டில்லி விமான விபத்து:

# சடலங்களை தேடும் பணி தொடர்கிறது!

## எவராவது தப்பியதாக தகவல் இல்லை

நேற்று முன்தினம் காலை டில்லிக்கு அருகே இரண்டு விமானங்கள் வானத்தில் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் 351 பயணிகள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 33 விமான சிப்பந்திகளும் அடங்குவர். எனினும் இதுவரை எவராவது உயிர் தப்பியதாகத் தகவல் இல்லை.

டில்லிக்குத் தென்மேற்கே சுமார் 65 கிலோ மீற்றர் தொலைவில் ஹரியானா மாநிலத்தில் இந்த விபத்து இடம் பெற்றது.

சவூதிஅரேபியாவைச்சேர்ந்த ''போயிங் 747'' ரகவிமானமும் கசகஸ்தானைச் சேர்ந்த ''ரியெல்லோ 154'' ரகவிமானமுமே மோதிக்கொண்டன.

விபத்தில் இறந்துபோனவர்களின் சடலங்களை மீட்கும் பணிகள் தொடர்கின்றன.

விமானங்களில் பயணஞ் செய்த 3 பேர் உயிருடன் இருப்பது தெரிய வந்து ஹரியானாவில் உள்ள மருத்துவ மனைக்கு அவர்களை எடுத்துச் சென்றபோது அவர்கள் வழியில் இறந்து விட்டனர் என்று பி.ரி.ஐ செய்தி தெரிவித்தது.

சவூதி அரேபியா விமானம் இன்னமும் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாகவும் — விமானப்பயணிகளின் சடலங்கள் வயல் வெளிகளில் சிதறிக் கிடப்பதாகவும்—

விபத்து நடந்த இடத்தைப் பார்த்து விட்டு நேற்று முன்தினம் நள்ளிரவுக்கு பின் திரும்பிய இந்திய வானொலிச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற சமயம் சவூதி விமானத்தில் 312 பேரும், கசகஸ்தான் விமானத்தில் 39 பேரும் பயணம் செய்தனர்.

மோசமாகக் கருகிப்போய் இருக்கும் சடலங்களைத் தேடி எடுக்கும் பணியில் நூற்றுக் கணக்கான கிராம மக்களும் பொலீசாரும் ஈடுபட்டுள்ளனர்.

இருட்டில் சடலங்களைத் தேடுவது சிரமமாயிருந்ததாக தெரிவிக்கப்பட்டது விபத்து நடந்த 6 மணி நேரத்திற்குப் பின்னர் சுமார் 100 சடலங்கள் மட்டுமே தேடி எடுக்கப்பட்டு மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

சவூதி விமானத்தின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்ட இடத்திலிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிராமம் ஒன்றில் கசகஸ்தான் விமானம் கிடந்தது.

டில்லி விமான நிலையத்தில் இருந்து தஹ்ரானுக்கு மாலை 6 33 க்கு மணி சவூதி அரோபிய விமானம் புறப்பட்டதாகவும் —

கசகஸ்தானில் இருந்து டில்லி வந்து கொண்டிருந்த விமானம் மாலை 6.45 மணிக்கு தரையிறங்குவதாக இருந்தது என்றும் சவூதி விமானம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 7 நிமிடங்களுக்குப் பிறகு இரு விமானங்களுமே கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பை இழந்தன என்றும் சிவில் விமானத்துறை தலைமை இயக்குநர் எச். எஸ். கஹாலா தெரிவித்தார்.

(இ-ரி)

### ஸயருக்கு பன்னாட்டு படை

ஸயர், நவ. 14

பன்னாட்டுப் படையை ஸயருக்கு அனுப்புவது தொடர்பான தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றும்படி கனேடியப் பிரதமர் ஐ.நா. மன்றத்தைக் கேட்டுள்ளார்.

அத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 48 மணி நேரத்துக்குள் கனேடியத் துருப்புக்கள் அந்நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

ஸயருக்கு அனுப்பப்படும் பன்னாட்டுப் படைகளுக்கு கனடா தலைமை வகிக்கும் என ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்தார். (இ-10)

## அழகிகளை எதிர்த்து பெங்களூரில் ஆர்ப்பாட்டம்

### 17 பேர் கைதாகினர்

பெங்களூர், நவ. 14

உலக அழகுராணிப் போட்டியில் பங்கு பற்ற இந்தியா வந்துள்ள அழகிகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் பெங்களூரில் நடைபெறவுள்ள உலக அழகுராணிப் போட்டியில் கலந்து கொள்ள நேற்று முன்தினம் பெங்களூர் விமான நிலையம் வந்திறங்கிய 89 போட்டியாளர்கள் மலர்ச்செண்டு அளிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

போட்டியில் பங்கு பற்றும் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

போட்டியாளர் விமான நிலையம் வந்திறங்கிய போது வெளியே நின்று ஆர்ப்பாட்டம் செய்தோரிலேயே 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-10)

கியூபாவுக்கு எதிரான

## வர்த்தகத் தடையை நீக்குமாறு தீர்மானம்

நியூயோர்க் நவ. 14

கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள வர்த்தகத் தடையை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா, பொதுச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதற்கான தீர்மானத்தை

**உலக அரங்கில்**

சபை மிகப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியது.

தீர்மானத்துக்கு ஆதரவாக 137 நாடுகளும், எதிராக 3 நாடுகளும் வாக்களித்தன. 25 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இவ்வாண்டு அந்த நாடுகள் அனைத்தும் ஆதரவாக வாக்களித்தன எனினும் பொதுச் சபையின் தீர்மானம் அமெரிக்காவைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவிக்கப்படுகிறது.

### ஜப்பானிய அமைச்சரவை

ஜப்பானில் சிறுபான்மை அரசு நிறுவி உள்ள பிரதமர் ஹஷிமோட்டோவின் அமைச்சரவையில் உள்ள அனைவரும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களோ.

ஓர் அமைச்சரின் வயது 69. மற்றும் 20 பேர் கொண்ட அமைச்சரவையில் பெண் அமைச்சர் ஒருவர் மட்டுமே.

## புதுமையான திருடரின் பேட்டி

புலிகளின் சிறையிலிருந்து தப்பி வந்ததாகக் கூறப்படும் நான்கு திருடர்களைப் பேட்டி கண்டு அசத்தியது ரூபவாஹினித் தொலைக்காட்சி.

31 - 10 - 96 அன்று மாலை 8-30 இக்கு ரூபவாஹினி தொலைக்காட்சியில் அப் பேட்டியைக் கண்டும் கேட்டும் வயிறு குலுங்க சிரிக்காதவர்களே இல்லை எனலாம்.

பேட்டி கண்டவர் கேள்விகளை தொடுத்த விதம் கலாதியாக இருந்தது. செந்தமிழை அவர் உச்சரித்த பாணியும் நல்லதொரு நகைச்சுவை விருந்துதான்.

ரூபவாஹினியில் பணியாற்றும் தமிழ் பேசும் அறிவிப்பாளர்கள் திடீரென்று தலைமறைவாகி விட்டதால் தமிழ் பேசத் தெரிந்த ஒரு சிங்களச் சகோதரியிடம் பேட்டி எடுக்கும் பொறுப்பை ஒப்படைத்தார்களோ என்று பலத்த சந்தேகம் ஏற்பட்டது எனினும் அதுகூட பேட்டியின் நகைச்சுவைத் தரத்தை உயர்த்தியதையும், நேயர்கள் குறிப்பிட்ட பேட்டியை ''சீரியசாக'' நினைக்காதளவுக்கு கலகலப்பாக்கியதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

முதலில் மூன்றுபேரைப் பேட்டி கண்டார்கள். காதலுக்கு தடை போடுகிறார்கள் என்ற வாசகத்தைக் திரையில் காட்டிவிட்டு பேட்டியை ஆரம்பித்தனர்.

தன்னைக் காதலித்து கைவிட்டு, வேறு பெண்ணைக் காதலிப்பதாக தெரிவித்து பெண் ஒருவர் புலிகளின் காவல்துறையில் புகார் செய்தாராம். புலிகளின் காவல் துறை தன்னைக் கைது செய்து சிறையில் வைத்திருந்தாம் என்றார் பேட்டி தொடுத்தவரில் ஒருவர்.

உடனே கேள்வி கேட்டவருக்கு மனிதாபிமானம் பீறிட்டுக் கிளம்புகிறது. ''இங்கே ஒரு கலியாணம் செய்யலாமா? உங்கடை பெட்டை அங்கே இருக்கா?'' என்றெல்லாம் கேட்டு சிரிப்பூட்டினார்.

காதலுக்கு தடைபோடுகிறார்கள் என்பதுதான் பேட்டியின் சாராம்சம். ஆனால் பேட்டி கண்டவரும் காதல் ஒரு குற்றம்; ஆனால் சிறு குற்றம் என்ற ரீதியில் கேள்விகளைத் தொடுத்ததுதான் அட்டகாசமான நகைச்சுவையாக அமைந்தது.

> கடந்த 31 ஆம் திகதி ரூபவாஹினியில் தமிழில் ஒளிபரப்பான பேட்டி நிகழ்ச்சி ஒன்று குறித்து 'தினமுரசில்' வெளியான விமரிசனம் இங்கு மறுபிரசுரமாகுகின்றது.

''நீங்கள் செய்த சிறு குற்றத்துக்கு பெரிய தண்டனை தந்துவிட்டார்கள் என்ன?'' என்று பேட்டியாளர் கேட்க, ''நாங்கள் குற்றம் செய்யவில்லை'' என்று அவர்கள் சொல்ல, 'சரி' என்றுவிட்டு, பின்னரும் ஒரு தடவை சிறு குற்றத்துக்கு பெரும் தண்டனை என்று பேட்டி எடுத்தவர் வருத்தப்பட்டுக் கொண்டார்.

அது முடிய இரண்டாவது பேட்டி. பேட்டி கொடுத்த இளைஞரை போராளிகுடும்பத்தைச் சேர்ந்தவர் என்று அறிமுகம் செய்தார் பேட்டி கண்டவர்.

ஆனால் பேட்டியின் போது உண்மைவெளிப்பட்டுவிட்டது.

''போராளி குடும்பங்களுக்கும், மாவீரர் குடும்பங்களுக்கும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. நம்மைப்போன்ற சாதாரண குடும்பங்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை'' என்றார் அந்த இளைஞர்.

மாவீரர் குடும்பம், போராளிக் குடும்பங்களுக்கு புலிகள் முன்னுரிமை கொடுப்பது ஒன்றும் இரகசியமல்ல. மக்களிடம் இது தொடர்பான முணுமுணுப்புக்களும் இல்லாமலில்லை. ஆனால் அரசாங்கமும் படையினருக்கும், படையினரது குடும்பங்களுக்கும் தான் முன்னுரிமை கொடுக்க ஆரம்பித்துள்ளது.

அது மட்டுமல்ல, அந்த இளைஞர் சொன்னதிலிருந்து அவரைப்பற்றி நமக்கு தெரிந்த தகவல்கள் பின்வருமாறு:

சிலகாலம் அவர் புலிகள் இயக்கத்தில் இருந்தார். பின்னர் விலக அனுமதி கேட்டார். அனுமதி கொடுக்கப்பட்டது.

விலகியிருந்த போது சைக்கிள் ஒன்றைத் திருடினார். புலிகளின் காவல்துறை அவரைப் பிடித்து வைத்திருந்தது. அவர் எப்படியோ தப்பி ஓடிவிட்டார். பின்னர் அவரைத்தேடிப் பிடித்து மீண்டும் சிறையில் வைத்திருந்தார்கள்.

அதில் என்ன தவறு என்று தெரியவில்லை சைக்கிள் திருடர்களுக்கு எந்த நாட்டுப் பொலிசார்தான் சன்மானம் கொடுக்கிறார்கள்?

புலிகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய திருடர்கள் தான் கிடைத்தார்களா? புலிகள் மீது வெறுப்பை ஏற்படுத்த வேண்டுமானால் திருடர்களை நியாயவாதிகளாக சித்திரிக்க வேண்டுமா என்ன?

படையில் இருந்து தப்பியோடியவர்களுக்கு யாரும் வேலை கொடுக்கக்கூடாது என்பது அரச உத்தரவு.

(6ஆம் பக்கம் பார்க்க)

குண்டு வெடிப்பில் பலியான

## சலுசலா பெண் ஊழியர் குடும்பத்துக்கு நஷ்டஈடு

யாழ்நகரில் உள்ள சலுசலா விற்பனை நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்பில் பலியான யுவதியின் குடும்பத்துக்கு ரூபா இரண்டரை லட்சம் நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

அவர் ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே வேலையில் சேர்ந்தவர் என்றும்—

சலுசலாவில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதாகவும்—

இதன்படி இறந்தவரின் குடும்பத்துக்கு இரண்டரை லட்சம் ரூபாவரை நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது என்றும் — சலுசலா நிறுவன தலைவர் எச். ஜி. சிறிசேன தெரிவித்தார்.

அத்துடன் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பொது மக்களுக்கும் உதவி செய்ய முடியுமா? என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்றும் அவர் கூறினார். (இ-3)

## பொலீஸ் நிலையங்களில் சித்திரவதை நடவடிக்கை

### உயர்நீதிமன்ற நீதியரசர் தெரிவிப்பு

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளினால் சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறித்து நீதிமன்றங்கள் பல தீர்ப்புக்களை அண்மைக் காலத்தில் வழங்கியுள்ளன. என்றாலும் பொலீஸ் நிலையங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளினால் சித்திரவதையும், மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டே வருகின்றன — இவ்வாறு கூறியிருக்கின்றார் உயர்நீதிமன்ற நீதியரசர் பி. இராமநாதன்.

ஸ்ரீ லங்கா மருத்துவ - சட்ட சழகத்தின் விஞ்ஞான அமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனியன்று இந்த அமர்வு இடம் பெற்றது.

சிறந்த நடைமுறைப் பெறுபேறுகளைத் தரக்கூடியதாக சான்றுச் சட்டம். திருத்தப்பட வேண்டும் என்றும் நீதியரசர் இராமநாதன் தமது உரையில் வலியுறுத்தினார். (உ-3)

### ஜெனரேட்டர்

யாழ். பல்கலைக்கழகத்தில் 28 கே.வி வலுவுள்ள ஜெனரேட்டர் ஒன்று நேற்று முன்தினம் பொருத்தப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை இதைப் பொருத்தியுள்ளது.

இதன் மூலம் பல்கலைக் கழகத்தில் நிலவிய குடிதண்ணீர் மற்றும் மலசல கூடப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மோசடி ஆயுத நிறுவன வலையில் மீண்டும் விழுந்த கடற்படையினர்!

## ரூ.17 கோடி 50லட்சம் முகவரிடம் சிக்கியது!!

ரஷ்யாவில் உள்ள ஆயுத உற்பத்தி நிறுவனம் ஒன்று ஏற்கனவே பாவித்த ஆயுதங்களை இலங்கைக்கு விற்க இருந்த சமயம் அது கண்டு பிடிக்கப்பட்டு அது சம்பந்தமான ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டது.

தற்போது கப்பல்கள் உட்பட அவசரமாக ஆயுதங்கள் கொள்வனவு செய்யச் சென்ற இலங்கை கடற்படை அதிகாரிகள் குழு அதே ஆயுத நிறுவன முகவரின் வலையில் சிக்கி உள்ளது.

கப்பல் கொள்வனவுக்காக அந்த முகவரிடம் கொடுத்த 17 கோடியே 50 இலட்சம் ரூபாவும் திருப்பிக் கிடைக்காது என்று சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக ''த ஐலண்ட்'' ஆங்கில வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

ரஷ்ய இராணுவத்தினால் பாவிக்கப்பட்ட ஆயுத தளபாடங்களைப் புதியன எனக் கூறி ஸ்ரீலங்காவிற்கு விற்க முனைந்தபோது அது நேர காலத்துடன் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து 1994 ஒகஸ்ட் மாதத்தில் 350 கோடி ரூபா பெறுமதியான விநியோக ஒப்பந்தம் ஜனாதிபதி சந்திரிகாவால் ரத்துச் செய்யப்பட்டது.

1995 ஏப்ரலில் மீண்டும் யுத்தம் வெடித்தபோது முப்படைகளிடம் போதிய ஆயுத தளபாடங்கள் இல்லாதநிலை தோன்றியது.

ஒன்பது மாதங்களாக ஆயுதங்கள், யுத்த டாங்கிகள், வாகனங்கள், விமானங்கள், சண்டைக் கப்பல்கள் எவையும் கொள்வனவு செய்யப்படாததை அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகளை அழைத்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்துக்குத் தேவையான ஆயுத தளபாடங்களை அவசரமாகக் கொள்வனவு செய்யுமாறு பணித்தார்.

இதன்படி முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் குழுக்களாக சுமார் 25 நாடுகளுக்கு விஜயம் செய்தனர்.

இவ்வாறு ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ளச் சென்ற கடற்படைக் குழுக்களில் ஒன்று 1994 இல் ஜனாதிபதியால் ரத்துச் செய்யப்பட்ட ஆயுத விநியோகத்துடன் தொடர்புடைய அதே கம்பனியின் முகவரின் வலையில் விழுந்தது.

ஒவ்வொன்றும் 85 கோடி ரூபாவுக்கு இரு ரஷ்ய போர்க் கப்பல்களை வாங்குவதற்கு ஏற்பாடாகியது.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை அடுத்து ரஷ்ய முகவருக்கு 10 வீத முற்பணமாக 17 கோடியே 50 இலட்சம்ரூபாவழங்கப்பட்டது

இந்தக் கப்பல்களை ஸ்ரீலங்காவுக்குக் கொண்டு வருவதற்கு முன் அவற்றின் கடற் செயற்பாடுகளை நேரில் கண்டறிய கடற்படை அதிகாரியர் அட்மிரல் ரெறன்ஸ் சுந்தரம் தலைமையில் குழு ஒன்று ரஷ்யா சென்றது.

கடற்படை அதிகாரிகள் சென்ற சமயம் ரஷ்யாவில் குளிர்காலமாதலால் பீற்றேஸ் பேர்க்கை அண்டிய பகுதிகளில் கடல் நீர் உறைந்திருந்தது. இதனால் கப்பல்களின் செயற்பாட்டை நேரில் அவதானிக்க முடியவில்லை.

இறுதியில் இக்குழுவினருக்கு ஒரு கப்பலைக் காட்டி 'இதைத்தான் உங்களுக்குத் தரவிருந்தோம். ஆனால் அது இப்போது வேறு ஒரு நாட்டுக்கு விற்கப்பட்டு விட்டது' என அந்த முகவர் தெரிவித்தாராம்.

ஒரு மாத காலத்தை வீணடித்த பின்னர் கடற்படைக்குழு நாடு திரும்பியது.

அதுவரை கடற்படையினர் இந்தக் கொள்வனவு விடயத்தில் நேரடியாகவே ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் வெளி விவகார அமைச்சுடனோ, ரஷ்ய தூதரகத்துடனோ அல்லது ரஷ்யாவிலுள்ள இலங்கை தூதரகத்துடனோ தொடர்பு கொண்டிருக்கவில்லை.

இதே சமயம் 10 வீத முற்பணத்தை பெற்ற ரஷ்ய முகவர் தற்போது விற்பதற்கு தன்னிடம் ஒரு கப்பல் கூட இல்லை எனத் தெரிவித்துள்ளார். பெற்றுக்கொண்ட முற்பணத்தையும் திருப்பித் தரவில்லை.

காலங்கடந்த பின்னர் கடற்படையினர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டனர். ஆனால் சிக்கல் நிறைந்த இவ்விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு தலையிட முன்வரவில்லை.

முற்பணமாக வழங்கிய 17 கோடியே 50 லட்சம் ரூபாவை தொலைத்ததாக கணக்குகளை நேர்சீர்செய்ய (Write off) கடற்படை விடுத்த கோரிக்கையும் பாதுகாப்பு அமைச்சினால் நிராகரிக்கப் பட்டுள்ளது.

இதனால்—

கடற்படையினர் மீண்டும் ரஷ்யா சென்று எப்படியாவது தங்களுக்கு இரு யுத்தக் கப்பல்களை வழங்குமாறு அந்த ஆயுத முகவரிடம் மன்றாடினர்.

''கிறிஷ்ஷா - 5'' தரத்தைச் சேர்ந்த (Crisha- V) இருபோர்க்கப்பல்களை வழங்குவதாக முகவர் தெரிவித்தார்.

''சிறிய நீர்மூழ்கி எதிர்ப்பு யுத்தக் கப்பல்'' என முன்னாள் சோவியத் கடற்படை இக்கப்பல்களை தரப்படுத்தியிருந்தது.

கடற்புலிகளுடன் போராட சிறிய அமைப்பிலான படகுகளே கடற்படைக்கு பற்றாக் குறையாக உள்ளன. பெரிய போர்க் கப்பல்களால் வேகமாக நகரமுடியாது. மேலும் சுமார் 11 மாதங்களுக்கு முன்னர் இவ்வாறான பெரிய போர்க் கப்பல் ஒன்று கடற்படையால் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் அந்தக் கப்பல் இதுவரை எந்தவொரு சண்டைக்கும் பயன்படுத்தப்படவில்லை.

''கிருஷ்ஷா'' ரக போர்க் கப்பல்கள் கடலில் நடமாடும் போது குறைந்தது 4 அல்லது 5பீரங்கிப்படகுகள், டோறாக்கள் அவற்றிற்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

ஆனால் இன்றைய நிலையில் கடற்படைக்கு அது கட்டுபடியாகாது. எனவே இந்த ''கிருஷ்ஷா'' ரக கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட்டாலும் அவற்றைக் கொழும்பிலேயே தரித்து நிறுத்த வேண்டும்.

கடந்த ஏப்ரலில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து கொழும்புத் துறைமுகம் கூட கப்பல்களுக்குப் பாதுகாப்பானது எனக் கூற முடியாது.

சீனாவிடமிருந்து 1கோடியே 30 லட்சம் பெறுமதியான கொள்வனவுக்கு மூத்த கடற்படைக் கப்டன் அனுப்பப்பட்டிருந்தார். ஆனால் 170 கோடி ரூபா பெறுமதியான இக்கொள்வனவுக்கு ஒரு இளைய அதிகாரி அனுப்பப் பட்டுள்ளார். இது கடற்படை வட்டாரத்தில் ஆச்சரியத்தைத் தோற்றுவித்துள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## மாஹோ புறப்பட்டது

புகையிலை, சுருட்டு, புழுக் கொடியல், கடலட்டை ஆகிய பொருள்களை ஏற்றிக் கொண்டு மாஹோ கப்பல் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றது.

(இ-173)

## புதுமையான—

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் புலிகளில் இருந்து விலகிய ஒருவருக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இருந்து ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதை குறிப்பிட்ட பேட்டி மூலமே தெரிந்து கொள்ள முடிந்தது. பொல்லைக் கொடுத்து அடிவாங்குவது இதுதானாக்கும்.

படையில் இருந்து தப்பி ஓடியவர்கள் தென்னிலங்கையில் கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்; அவர்களைப் பிடிக்க முடியவில்லை. படையில் இருந்து தப்பியோடியோர் செய்யும் குற்றச் செயல்கள் பெருகி வருகின்றன. நமது அரசாங்கத்தால் அதைத் தடுக்கமுடியவில்லை. புலிகளோ தம்மில் இருந்து விலகியோர் ஒரு சைக்கிள் திருடக் கூட விடுகிறார்கள் இல்லையே என்று ரூபவாஹினி வருத்தப்படுகிறதோ தெரியவில்லை.

பாலியல் வதைகள், பொருளாதாரத் தடைகள், காணாமல் போவோர் என்று வாழ்தலுக்கே தடைபோடுகிறது போர் நிலவரம்! பாவம் ரூபவாஹினி 'காதலுக்கு தடை போடுகிறார்களே' என்று கவலைப்பட்டு நேரத்தையும் நிகழ்ச்சியையும் வீணடித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க அரசாங்கத்திற்கு எத்தனையோ வழிகள் இருந்தன; இருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டு விட்டு திருடர்களைக் கூட்டி வந்து கதாப் பிரசங்கம் நடத்தத்தான் வேண்டுமா?

ரூபவாஹினியில் தரமான நகைச்சுவை நாடகங்கள் தமிழில் ஒளிபரப்பாவதில்லையே என்ற குறையைப் போக்க விரும்பினால் இவ்வாறான நிகழ்ச்சிகளை மேலும் தொடரலாம். தயாரிப்புச் செலவும் அதிகமாகாது. ★

# முக்கிய அறிவித்தல்

## வலி-கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

அச்சுவேலி (வரையுள்ளது)

## கிளைக்குழுத் தேர்தல் - 1996

பின்வரும் கிளைகளில் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

திகதி 30-11-1996 சனிக்கிழமை

| கிளை இல. | கிளைப் பெயர் | ஏற்றுக்கொள்ளும் இடம் |
|---|---|---|
| 01 | அச்சுநகர் | அச்சுவேலிவடக்கு கிளை இல. 19 அச்சுவேலிச்சந்தி |
| 03 | தம்பாலை | |
| 04 | இடைக்காடு | |
| 05 | வளலாய் கிழக்கு | |
| 06 | வளலாய் மேற்கு | |
| 19 | அச்சுவேலி வடக்கு | |
| 18 | கதிரிப்பாய் | கதிரிப்பாய்க்கிளை |
| 02 | பத்தமேனி | பத்தமேனிக்கிளை |
| 07 | புஸ்பவதி | புஸ்பவதிக் கிளை |
| 08 | அச்சுவேலி தெற்கு | அச்சு. தெற்குக் கிளை |
| 16 | நாவற்காடு | நாவற்காட்டுக் கிளை |
| 20 | கலட்டி | கலட்டிக் கிளை |

திகதி 1-12-1996 ஞாயிற்றுக்கிழமை

| கிளை இல. | கிளைப் பெயர் | ஏற்றுக்கொள்ளும் இடம் |
|---|---|---|
| 09 | தோப்பு | தோப்புக் கிளை |
| 10 | ஆவரங்கால் தெற்கு | ஆவரங்கால் தெற்கு கிளை |
| 12 | நவற்கிரி | நவற்கிரிக் கிளை |
| 13 | புத்தூர் மேற்கு | புத்தூர் மேற்குக் கிளை |
| 14 | சிறுப்பிட்டி | சிறுப்பிட்டிக்கிளை |
| 15 | சூரியோதயம் | சூரியோதயக் கிளை |
| 17 | வாதரவத்தை | வாதரவத்தைக் கிளை |
| 22 | புத்தூர் கிழக்கு | புத்தூர் கிழக்குக் கிளை |
| 11 | புத்தகலட்டி | ஆவரங்கால் வடக்குக் கிளை |
| 21 | ஆவரங்கால் வடக்கு | |

1 நியமனப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நேரம் காலை 9-00 மணி முதல் 10-00 மணி வரை (புதிய நேரம்)

2 ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளப்படும் நேரம் காலை 10-00 மணி முதல் 11-00 மணி வரை (புதிய நேரம்)

3 கிளைக்குழுத் தேர்தல் நடைபெறும் கிளைகள், திகதி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நா தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்

பிரதேச செயலகம்,
கோப்பாய்.
11-11-1996.

(சி-3488)

# 6-வது மாத நினைவஞ்சலி

அன்னை மடியில்: 10 — 03 — 1913



ஆண்டவன் திருவடியில் 15 — 05 — 1996

## கவிஞர் செல்லப்பா ஐயாத்துரை

அவர்கள்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், உரும்பிராய் வடக்கு)

தூய்மையான வெள்ளை வேட்டி, அதற்கேற்ப நாஷனல், பரமாஸ் சால்வை இவைகளை அழகாக அணிந்து, யார் யாரை, எந்தெந்த இடத்தில், சந்திக்க வேண்டுமோ, அந்த அந்த இடங்களில், சென்று சந்தித்துத்தான் செயற்படாமல் இருந்த கிராம முன்னேற்றச் சங்கத்தை 06 - 06 - 1959 இல் உரும்பிராய் வடக்கில் மீண்டும் உருவாக்கி அதன் செயலாளராக 1973 வரை பணிபுரிந்து பின்னர் 73 ஆம் ஆண்டிலிருந்து அமரத்துவம் அடையும்வரை தலைவராகவும் பணி புரிந்தார். இவரது 36 வருட காலங்களில் இச்சங்கம் மூலம் அளப்பரிய சேவைகளை இப்பகுதி மக்களுக்கு ஆற்றியுள்ளார். இப்படிப்பட்ட செயல் வீரன் எம்மைப் பிரிந்து 6 மாத காலங்கள் ஆகியும் அவர் நினைவுகள் எம்மை விட்டு என்றென்றும் அகலாது நினைவில் நிற்கும். அவரின் குடும்பத்திற்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்,
உரும்பிராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம்
உரும்பிராய் வடக்கு.

(43601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்

### உதயன்

## புதிய ராகம் நிலைக்குமா?

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பினும், அரசில் இருந்து விலகப்போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப்போவதுமில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் போக்குவரத்து சுற்றுப் புறச்சூழல்துறை அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி.

ஏழு கட்சிக் கூட்டணி அரசான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில், ஸ்ரீமானியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் ஒன்று. அரசின் அங்கத்துவக் கட்சிகளிடையே பல விடயங்களில் கருத்து முரண்பாடுகள் நிலவுவது ஒன்றும் இரகசியமல்ல. கொள்கை ரீதியாகவும் பல வேற்றுமைகள் உள்ளன.

கூட்டு அரசாங்கத்தின் உறுப்புக் கட்சிகளிடையே கருத்து மோதல்கள் உண்டாவதும், அவற்றினிடையே பிணக்கு ஏற்படுவதும் ஒன்றும் புதுமையல்ல: அது வழக்கம் தான். ஆனால் அவற்றைப் பேசித் தீர்த்து கருத்திணக்கத்துக்கு வருவது தலைமைத்துவத்தின் திறமையிலேயே தங்கி உள்ளது— என்று அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஒரு முறை விளக்கமளித்திருந்தார்.

ஆனால் அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதே அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது.

ஒற்றையாட்சி முறையை மாற்றுவது என்ற அதிகாரப் பரவல் திட்டத்தின் ஜீவாம்சத்தையே ஸ்ரீமானி எதிர்க்கிறார். அதனைத் தாம் ஆதரிக்கப்போவதில்லை என்று மிக வெளிப்படையாகவும், உறுதியாகவும் பல பத்திரிகைச் செவ்விகளில் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கருத்து வேறுபாட்டைச் சாதாரண வகையில் சேர்க்க முடியாது. அவரை — அவரது கட்சியை — இவ்விடயத்தில் சந்திரிகா எவ்வாறு கருத்திணக்கத்துக்குக் கொண்டு வரப் போகிறார் என்பது தெரியவில்லை. அந்த முயற்சியில் அரசு வெல்லுமா என்பதும் தெளிவில்லை.

பல முக்கிய விடயங்களில் ஜனாதிபதி சந்திரிகா தம்மைக் கலந்தாலோசிக்காமல் அல்லது தகவல் தெரிவிக்காமல் புறக்கணித்து வருவதாகவும் திருமதி அத்துலத்முதலிக்கும் புழுக்கம் உண்டு.

ஆகையால் அதிகாரப் பரவல் விடயத்தில் — ஒற்றையாட்சியை ஒழிப்பது என்ற அம்சத்துக்கு — ஸ்ரீமானியை கருத்தொருமைக்கு கொண்டு வருவது அரசாங்கத் தலைமைத்துவத்துக்கு, கல்லில் நார் உரிக்கும் முயற்சியாகவே இருக்கும்.

ஆனால் —

இத்தகைய ஒரு பின்னணியில், தலைமைத்துவத்துடன் தமக்குக் கருத்து வேற்றுமைகள் இருந்த போதிலும், தாம் அரசாங்கத்தை விட்டு விலகப் போவதில்லை என்று ஸ்ரீமானி புதிய ராகம் பாடுகிறார். இது அவரது மனமாற்றத்தைக் காட்டுகிறதா அல்லது அதிகார ருசியைத் துறக்க மனம் ஒப்பவில்லை என்பதனைக் காட்டுகிறதா என்ற கேள்வி எழவே செய்யும்.

ஸ்ரீமானிக்கு மனமாற்றம் வந்தால், அரசுக்கு லாபமே!

# மற்றொரு தாக்குதலுக்கு புலிகள் தயாராகின்றனர்?

### வாகரை, தொப்பிகலவில் 1,000 பிரேதப் பெட்டிகள்

மட்டக்களப்பு, நவ. 14

பாதுகாப்புப் படைகள் மீது பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன் முன் ஆயத்தமாக விடுதலைப் புலிகள் ஆயிரம் பிரேதப் பெட்டிகளைத் தயார் செய்து வைத்துள்ளனர் என ''திவயின'' பத்திரிகை தெரிவிக்கிறது.

சிலவாரங்களுக்கு முன்னர் ஆயிரம் பிரேதப் பெட்டிகளைத் தயார் நிலையில் வைக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைவரால் மட்டக்களப்பு பிரதேசத் தலைவர்களுக்கு கட்டளையிடப்பட்டதாகவும்—

இதற்கு அமைய ஆயிரம் பிரேதப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வாகரை, தொப்பிகல ஆகிய இடங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ–10)

## மருந்து தட்டுப்பாடு

தென்மராட்சி, நவ. 14

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் பனடோல் உட்பட பல மருந்துக் குளிகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வருகிறது.

தட்டுப்பாடான மருந்துகளை தனியார் மருந்துக் கடைகளில் வாங்கிப் பாவிக்குமாறு நோயாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. (உ-117)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 14

பின்வரும் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டங்கள் அந்தந்தத் தினங்களில் காலை 11 மணிக்கு நடைபெறும் என யாழ். கல்வி வலயம் I இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

★ யாழ்ப்பாணம் :- இன்று கன்னியர் மடம் ம. வியில்.

★ நல்லூர் :— நாளை யாழ். இந்து மகளிர் கல்லூரியில்.

★ வேலணை, ஊர்காவற்துறை :— எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேலணை கிழக்கு ம. வியில்.

இக்கூட்டங்களில் அதிபர்கள் சேவை நிறுவுதல் உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

### யாழ். செயலக ஓய்வூதியக் கிளையில்

## புதன்கிழமைகளில் மட்டுமே பொது மக்கள் தொடர்பு

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவுடன் பொதுமக்கள் புதன்கிழமை மட்டுமே தொடர்பு கொள்ள முடியுமென்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தினால் தற்போது மேற்கொள்ளப்படும் ஓய்வூதிய விநியோக நடவடிக்கைகளை பிரதேச செயலகங்களுக்கும் பன்முகப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் அவற்றைக் கையளிப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை கவனத்தில் கொண்டே இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் முதல் முதலாக ஓய்வூதியம் பெறுவதற்கு — தமது கொடுப்பனவு சம்பந்தமான கோவையை ஆரம்பிக்க — வேண்டியவர்கள் திங்கட் கிழமைகளிலும், புதன்கிழமைகளிலும் வருகை தரலாம் என அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-100-4)

## யாழ். மாணவர் நூறுபேருக்கு புலமைப்பரிசில்!

கொழும்பு, நவ. 14

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வி கற்கும் — தெரிவு செய்யப்பட்ட — நூறு மாணவர்களுக்கு ஜப்பானின் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இலங்கை நிப்பொன் கல்வி மற்றும் கலாசார நிலையம் தெரிவு செய்த இந்த 100 மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கல்விப் பணிப்பாளர் பொறுப்பேற்பு

அச்சுவேலி, நவ. 14

யாழ். கல்வி வலயம் இரண்டின் புதிய கல்விப்பணிப்பாளராக திரு. கே. சிவராசா பொறுப்பேற்றுள்ளார்.

கரவெட்டிக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக இதுவரை கடமையாற்றிய திரு. கே. சிவராசா வர்த்தகப் பாடத்துறை கல்வி நிர்வாகியாக பலவருடங்கள் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றியவராவார். (உ-11)

## மருந்துக் கலவையாளர்கள் கூண்டோடு சுகவீன லீவில்!

### தெற்கு ஆஸ்பத்திரிகள் பாதிப்பு

கொழும்பு, நவ. 14

மருந்துக் கலவையாளர்கள் சுகவீன விடுமுறையில் சென்றதால் அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்து விநியோகங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

டி. சி. பெரேரா சம்பள ஆணைக்குழுவின் அறிக்கையில் மருந்துக் கலவையாளர்களின் பணி அத்தியாவசிய சேவையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதால் தாம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று மருந்துக் கலவையாளர்கள் வேலைக்குச் சமுகமளிக்கவில்லை. வெளிநோயாளர்பிரிவில் மருந்துகள் வழங்கப்படவில்லை. அனுராதபுரம் வைத்தியசாலையிலும் மருந்துக் கலவையாளர்கள் சமுகம் அளிக்கவில்லை. காஸல் வைத்தியசாலையில் ஒரு வாரத்திற்குப் போதுமான மருந்துகள் இருப்பதால் அங்கு வேலைகள் பாதிக்கப்படவில்லை என்று அதன் பணிப்பாளர் தெரிவித்தார். கொழும்பு தெற்கு வைத்தியசாலையும் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவன பணியாளர்கள் தொழில்நுட்ப ஊழியர்கள், எக்ஸ்ரே ஊழியர்கள் உட்பட துணை வைத்திய சேவையைச் சேர்ந்தவர்கள் கடந்த 4 ஆம் திகதியிலிருந்து சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். (உ-ரி)

# அகத்தியரிடம் பலிக்காத தந்திரம்

அசமுகியிடம் விடைபெற்றுச் சென்ற வில்வலனும் வாதாவியும் வேறு ஒரு வனத்தை அடைந்து பிரமதேவரைக் குறித்து நெடுங்காலம் தவம் இருந்தனர்.

அவர்களுடைய தவத்துக்கு இரங்கிப் பிரமதேவர் காட்சி கொடாமையால், மனமுடைந்த வில்வலன் வேறு ஒரு காரியத்தை மனதில் எண்ணி, தம்பியாகிய வாதாவியின் சிரத்தை வாளால் கொய்து உடலைப் பல துண்டங்களாக வெட்டி தசையையும் இரத்தத்தையும் சேர்த்து அவிப் பொருளாக ஓம குண்டத்தில் இட்டு, பிரம மந்திரங்களை அட்சர பின்னம் இன்றி உச்சரித்து, மன உறுதியுடன் பல நாள்கள் வேள்வி செய்தான்.

யாக அக்கினி உலகம் எங்கும் பரவி உயிர்களை வருத்துவதையும் அசமுகி மைந்தனின் மன உறுதியையும் கண்டு இரங்கிய பிரமதேவர் அவன் எதிரில் அன்ன வாகனத்தின் மீது எழுந்தருளினார்.

தனது தம்பி மீண்டும் உயிர் பெற வேண்டும் என்று வரம் கேட்டுப் பெற்றான். அதோடு பிரமதேவனிடம் வேறு பல வரங்களையும் பெற்றான்.

அதன் பின்னர் வில்வலனும் வாதாவியும் வீரமகேந்திரபுரிக்குச் சென்று, சூரபன்மனை வணங்கி ''ஐயனே! நாம் வேறுயாருமல்ல, தங்கள் தங்கையின் மைந்தர்கள். உங்களுக்கு மருமகர் ஆவோம். பிரமதேவரை வழிபட்டு முனிவர்களை வாட்டும் வரத்தையும் பெற்றுள்ளோம்'' என்று தமது வரலாற்றைக் கூறினர்.

மகேந்திரபுரியில் அரச உபசாரம் பெற்றுச் சில காலம் தங்கியிருந்த வில்வலனும் வாதாவியும், தேச சஞ்சாரம் செய்து திரும்புவதாகச் சொல்லி மாமனிடம் செலவு பெற்றுக் குடகநாட்டை அண்மித்த ஒரு வனத்தை அடைந்தனர். அங்கு முக்கிய சந்தியில் ஆச்சிரமம் ஒன்றை அமைத்தனர்.

தம்பியாகிய வாதாவியோ முறுகி வளர்ந்த ஆட்டுக்கடாவின் உருக் கொண்டு மேய்வான். தவயோகி போல மாய வேடம் பூண்ட வில்வலன் அவ்வழியால் வரும் ரிஷிகளைப் பணிவுடன் எதிர்கொண்டழைத்து ஆச்சிரமத்தில் இளைப்பாறி அமுது உண்டு போகுமாறு வேண்டுவான்.



கந்த சஷ்டி சிந்தனை 4

பின்னர் அறுசுவை உணவு தயாரித்து ஆட்டுக்கடாவாக நிற்கும் தம்பியை வெட்டிக் கறி சமைத்து, வாழை இலை பரப்பிப் போசனம் படைப்பான். முனிவர்கள் உணவைச் சாப்பிட்ட பின்பு 'ஓ! வாதாவி வா'' என்று அழைப்பான். பிரமனிடம் பெற்ற வரத்தின் பயனாக வாதாவி உருவம் பெற்றுக் கூரிய கொம்பினால் முனிவரின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவான்.

உயிர் பிரிந்த உடலை இருவருமாகப் புசித்துப் பசியாறி, பழையபடி தம்பி ஆடாக மேய்ந்தும் தமையன் ரிஷியாக வேடம் பூண்டும் பல முனிவர்களை நாள்தோறும் கொலை செய்து உண்டு வாழ்ந்துவந்தனர்.

[illegible] கட்டளைப்படி பொதிய மலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த அகத்திய முனிவர் அந்த வழியே வருவதைக் கண்ட வில்வலன் அவரை எதிர்கொண்டழைத்து உபசார வார்த்தைகள் கூறி, வழக்கம் போல அறுசுவை உணவு படைத்தான்.

பின்னர் ''ஓ! வாதாவி வா'' என்று அழைத்ததும் 'இதோ வந்தேன்' என்று வயிற்றில் இருந்து வாதாவி குரல் கொடுத்தான் இது அசுரர்கள் சூழ்ச்சி என்று உணர்ந்த குறுமுனியோ திருநீற்றைக் கையில் எடுத்து ''கறியாகப் புசிக்கப்பட்ட வாதாவி ஜீரணமாகுக'' என்றுகூறிவயிற்றைத் தடவுதலும் வாதாவி ஜீரணமாகி மலமாகி விட்டான்.

கோபங் கொண்ட வில்வலன் முனிவரைக் கொல்ல ஒரு தண்டத்தை எடுத்ததும், அகத்தியர் தருப்பைப் புல்லைக் கிள்ளி பசுபத மந்திரத்தை உச்சரித்துக் செலுத்துதலும் அது வில்வலனைக் கொன்றது.

கோபம் தணிந்த குறுமுனி சிவ பிரானைத் துதித்துக் கொண்டு தென் திசை நோக்கிச் சென்றார்.

—மூளாய் அருணாசலம்

### நாளை

ஐப்பசி 30

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி

பின்இரவு 2.38 வரை,

நட்சத்திரம்: பூராடம்

முன்இரவு 9 20 வரை.

ராகுகாலம்: 10.37-12.07

சுபநேரம்: 6.07–7 37

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.14

நல்லூர் பல நோ. கூ. சங்கத்தின் முன்னாள் தலைவரும் கோண்டாவில் ஐக்கிய பண்டகசாலையின் முன்னாள் ஸ்தாபகரும், தலைவரும், அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தனாதிகாரியும், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபருமான அமரர் இ. பொ. குமாரசுவாமியின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் செல்வி. பா. மார்க்கண்டு தலைமையில் நாளைக் காலை 10.30 மணிக்கு நடைபெறும். (உ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத் தளபதி சிசிலுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

## பிணைக் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, நவ. 14

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினாவை இம் மாதம் 20 ஆம் திகதி வரை தொடர்ந்தும் காவலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை பிரதம நீதிவான் மணிலால் வைத்திய திலக உத்தரவிட்டார்.

ஆயுதப் படையினருக்கான உலர் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படும் மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே.

முன்னாள் இராணுவ தளபதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன, சந்தேக நபர் இரத்த அழுத்தத்தினாலும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு பிணை வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அத்துடன் இவர் இராணுவத் தளபதி என்ற வகையில், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், ஜே. வி. பீயினருக்கு எதிராகவும் பல நடவடிக்கைகளில் முன்னின்று நடத்தியுள்ளார். எனவே இந்த இரு இயக்கங்களைச் சேர்ந்த சந்தேக நபர்களை பெரிய எண்ணிக்கையில் வைத்திருக்கும் சிறையில் முன்னாள் இராணுவத் தளபதியையும் வைத்திருப்பது அவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்றும் திலக் மாரப்பன தெரிவித்தார்.

அவரின் வேண்டுகோளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த இரகசியப் பொலீஸார் சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

பிணைக் கோரிக்கையை மறுத்த நீதிவான் சந்தேக நபரான முன்னாள் இராணுவத் தளபதியை சட்டவைத்திய அதிகாரியிடம் கூட்டிச்சென்று அவரின் ஆலோசனைப்படி மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொடுக்குமாறும்— அவருக்குக் கூடுதல் பாதுகாப்பை வழங்குமாறும்—உத்தரவிட்டார். (உ-3)

## குடமியனில் கொலை!

தனியே வாழ்ந்த வயோதிபர் அடிகாயங்களுக்கு உள்ளான நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் வரணி, குடமியனில் இடம்பெற்றுள்ளது

மூன்று தினங்களாக இவரைக் காணாத உறவினர்கள் இவரின் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது அழுகிய நிலையில் இவரின் சடலம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த வீ. சின்னன் (வயது 77) என்பவரே மரணமானவராவார்.

விசாரணை நடத்திய சாவகச்சேரி திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரா கொலை எனத் தீர்ப்பளித்து சடலத்தை கிராம அலுவலர் முன்னிலையில் புதைக்குமாறு உத்தரவிட்டார். (உ-119)

## கூட்டம்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-ரி)


**சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்**
**(வ.து)**
**சுன்னாகம்**

**பதவி வெற்றிடங்களுக்கான**
**விண்ணப்பம் கோரல்**

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1. தட்டெழுத்தாளர் (தமிழ்) குறி இல. 305:13
   அ) சம்பளத் திட்டம்: 1030 — 1355/- / 20 x 10; 25 x 5
   ஆ) கல்வித் தகைமை:-
   க. பொ. த. சாதாரண தரத்தில் தமிழ் மொழியினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களிலான சித்தியும், தமிழ்மொழி தட்டெழுத்தாற்றல் குறைந்தது நிமிடத்திற்கு 20 சொற்கள்.
2. லொறிச் சாரதி குறி இல. 312:11
   அ) சம்பளத் திட்டம்; 1105 — 1560/- / 25 x 7; 35 x 8
   ஆ) கல்வித் தகைமை:-
   ஐந்தாம் வகுப்புச் சித்தியுடன் பஸ்/லொறி/ரக்ரருடன் பெட்டி ஆகிய வாகனங்கள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரத்துடன் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

1. வயதெல்லை:-
   23 — 40 க்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். சேவையிலுள்ள பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
2. விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும் சங்க தலைமைப் பணிமனையில் வேலை நாள்களில் ரூ. 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்ப முடிவு திகதி: **30 - 11 - 1996**

— பொது முகாமையாளர்

13-11-1996

(சி/3498)


**மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### 4 டென்மார்க்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு காவலில் வைக்கப்பட்டார் என்பது தெரிந்ததே.

இந்தப் பெண் தொடர்பான விவரங்களை சேகரிக்க வந்த இந்த 4 பத்திரிகையாளர்கள் குறித்து இரகசியப் பொலீஸார் வழங்கிய தகவல் ஒன்றை ஆதாரமாக வைத்து பொலீஸ் மா அதிபர் இவர்களை நாடு கடத்தும் உத்தரவை தற்போது நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

அதன்பின்னர் இவர்கள் பொலீஸ் தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களிடம் இருந்து 'கசட்'டுக்கள் மற்றும் சில ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டபின் நாடு கடத்தப்பட்டனர்.

இவர்களை நாடுகடத்துவதைத் தடுக்க கொழும்பில் உள்ள டென்மார்க் தூதுவரும் சட்டத்தரணிகளும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும், தடுக்க முடியாது போனதாக அச் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

நான்கு பத்திரிகையாளர்களும் இலங்கைக்கு வந்த நோக்கம் பிழையானது என சந்தேகிப்பதாகவும் —

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பிரசாரத்தை மேற்கொள்ளும் நோக்குடன் இவர்கள் இங்கு வந்ததாகக் கருதுவதாகவும் —

அத்தோடு இங்கு இவர்கள் பெறும் ஆவணங்கள் மூலம் அந்த இயக்கத்துக்காக பணம் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடலாம் எனச் சந்தேகிப்பதாகவும் —

அவர்கள் நாடுகடத்தப்படுவதற்கான உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சார்பான சட்டத்தரணி பி. பி. ஸிக்கு தெரிவித்தார். (உ-3-10)

### வவுனியாவில்வடக்கு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறார்கள்.

வவுனியாவுக்கு வடக்கே தாண்டிக்குளம் இராணுவ முகாமில் கடந்த மாத இறுதியில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதையடுத்து, இந்த மக்களில் கணிசமான தொகையினர் வவுனியாவுக்குள் பிரவேசித்தனர்.

தங்கள் உடைமைகளை எல்லாம் இழந்து, நிராதரவாக வந்திருக்கும் இந்த மக்கள் யாழ். குடாநாட்டில் உள்ள சொந்த இடங்களுக்குச் செல்லலாம் என்ற எதிர்பார்ப்புடன் அல்லது நாட்டின் தலைநகர் உட்பட தென்பகுதிக்குச் சென்று உறவினர், நண்பர்களிடம் புகலிடம் தேடலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே வவுனியாவுக்குள் முண்டியடித்தனர்.

சிலர் கொழும்பு வந்து வெளிநாடுகளில் உள்ள தங்கள் பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள், உறவினர்கள் ஆகியோருடன் இணைவதற்கும் விரும்பினர்.

ஆனால் இவர்கள் எல்லோரும் வகை தொகையின்றி வவுனியா பாடசாலைகளில் அகதிகள் என்ற பெயருடன் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நடமாடுவதற்கு இவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. தென்பகுதியிலிருந்து இவர்களைப் பார்க்கச் செல்லும் உறவினர், நண்பர்கள் கூட முகாம்களைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் முட்கம்பி வேலிகளுக்கு வெளியில் நின்று கைதிகளுடன் பேசுவது போன்றே கதைக்க வேண்டியுள்ளது.

அத்துடன் இந்த மக்களைத் தங்க வைப்பதற்காக வவுனியாப் பாடசாலைகளை அரசு மூடி அவற்றை அகதிமுகாம்களாக மாற்றியிருப்பதால் அப்பகுதியில் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

— இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றக் குழுத் தலைவர்களின் கூட்டத்தில் எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# மகளிர் அபி. நிலையம் ஜீவாகாரம் வழங்கும்

யாழ்ப்பாணம், நவ 14

கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கு ஜீவாகாரம் வழங்கும் நடவடிக்கையை மகளிர் அபிவிருத்தி நிலையம் மீண்டும் ஆரம்பிக்க உள்ளது.

இது தொடர்பாக மகளிர் அபிவிருத்தி நிலையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாவட்டத்தில் பல்வேறு காரணங்களினால் தொடர்ந்து நிலவிவரும் போஷாக்கு குறைபாடு கர்ப்பிணித்தாய்மாரையும், சிறு குழந்தைகளையும் அதிகமாகப் பாதித்துள்ளது.

அதன் காரணமாக பாடசாலை மாணவர்களிடையே கண்பார்வைக் குறைவு, கல்வியில் அசமந்த நிலை போன்றவற்றை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதை பாரிய மட்டத்தில் நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை இருந்த போதிலும் மகளிர் அபிவிருத்தி நிலையம் இத் தேவையினை முக்கியமாகக் கொண்டு கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் போஷாக்கு நல திட்டத்தின் கீழ் ஏற்கனவே போஷாக்கு வழங்கும் திட்டத்தை செயற்படுத்தி வந்துள்ளது.

மீண்டும் தொடர்ந்து ஒன்பது நோயாய் நிலையங்களில் வருகை தரும் கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளுக்கும் ஜீவாகாரம் வழங்குவதற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் முன்வந்துள்ளது. இச்செயற்பாடு மாநகர சபை எல்லைக்குள் செயற்படுத்தப்படும். இதன் முதலாவது நிகழ்வு ஜுபுலி நோயாய் நிலையத்தில் நாளை 15 ஆம் திகதி நடைபெறும். (இ-10)

## காங்கேசனில் மது இறக்கிய

# 'வாதுவ' இப்போதுதான் பருத்தித்துறைக்கு வந்தது!

வடமராட்சி, நவ. 14

காங்கேசன்துறையில் தரித்து நின்ற ''வாதுவ'' கப்பல் தற்போது பருத்தித்துறைக்கு வந்து பொருள்களை இறக்கத் தொடங்கியுள்ளது.

வடமராட்சிப் பகுதி வர்த்தகர்களுக்கான துணி வகைகளும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களும், ஆஸ்பத்திரிகளுக்கான மருந்து வகைகளும், தனியாருக்கான மதுபானவகைகளும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டிருந்தன.

இக்கப்பலுக்கு சுமார்பத்துத் தினங்களுக்கு முன்னரே காங்கேசன்துறைக்கு வந்திருந்து 'மாஹேற' மற்றும் 'ரீயூனியன்' போன்ற கப்பல்கள் பொருள்களை இறக்குவதற்கு காத்திருக்க —

இக் கப்பலில் எடுத்துவரப்பட்ட ஏனைய பொருள்கள் கப்பலில் அப்படியே இருக்க —

இக்கப்பலில் வந்த மதுபான வகைகள் மாத்திரம் கடந்த வியாழக்கிழமை — தீபாவளிக்கு முன்னர் — அவசர அவசரமாக — அதுவும் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து — இறக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

இக் கப்பலில் எடுத்து வரப்பட்ட மருந்து வகைகள் — பருத்தித்துறைக்கு கப்பல் வந்த பின்னர் — நேற்றுத்தான் இறக்கப்பட்டன.

மதுபான வகைகளை ஏற்றி வந்த வர்த்தகர் குறுக்கு வழியில் செல்வாக்கைப் பயன்படுத்தி — தாமே நேரடியாக படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காங்கேசன் துறைமுகத்துக்குள் சென்று — ஒழுங்கை மாற்றி மதுபான வகைகளை இறக்கி வந்ததாக அறிய வந்தது.

கடந்த செப்ரெம்பரிலும் இதே போன்று ஒரு தொகுதி மதுபான வகைகளை இதே வர்த்தகர் கப்பல் ஒன்றில் ஏற்றி வந்ததாகவும் —

ஆனால் மதுவைப் பெருமளவில் கொள்வனவு செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ அல்லது ஏற்றி வருவதற்கோ உரிய லைசென்ஸ் அவரிடம் அப்போது இருக்கவில்லை என்றும் —

இதனால் கப்பலில் இருந்து மதுவை இறக்க அப்போது சில அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் —

ஆனால் கப்பலில் வந்த மது அப்படியே இருக்க, வெளியில் உள்ள 'சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்' தனது செல்வாக்கையும் — அழுத்தத்தையும் — பிரயோகித்து, அந்த மதுவை இறக்கக்கூடியதாக தற்காலிக லைசென்ஸை அவர் பெற்றுக் கொண்டார் என்றும் —

தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டோர் இவ்வாறு குறுக்கு வழியில் செல்லும் வர்த்தகர்களுக்கு உடந்தையாக இருப்பது குறித்து ஏனைய யாழ். வர்த்தகர்கள் பலர் விசனம் தெரிவித்தனர்.

தம்மைப் பற்றிய இத்தகைய செய்திகள் அம்பலமாகாமல் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட வர்த்தகர் — மிரட்டல் பாணியில் செயற்பட முனைவதையும் அவதானிக்க முடிந்தது.

### கைதிகளின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு மேலாக எதுவித விசாரணையும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

ஆறு தமிழ் இளைஞர்கள் 5 வருடங்களுக்கு மேலாக விசாரணைகள் எதுவும் இன்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் வைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் 7 பேர் ஏற்கனவே பல வருடங்களாக காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் 2, 3 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

50 வயதுக்கு மேற்பட்ட 6 பேர் 18 மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இக்கைதிகள் கடந்த ஜூன் மாதம் உண்ணாவிரதம் ஒன்றினை மேற்கொண்டார்கள்.

அவர்களைச் சந்தித்த சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சு பிரதிநிதிகள் 3 மாதத்தில் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக உறுதி கூறினர்.

அந்த உறுதி மொழி நிறைவேற்றப்படாததால் அவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப்போவதாக எம்மிடம் தெரிவித்தனர்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

### வவுனியா கட்டு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவுக்கு வந்துள்ள அகதிகள் 14 ஆயிரத்து 303 பேர் முன்னணிக் காவல் அரண்களுக்கு அண்மையில் உள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இடம்பெறும் தாக்குதல்களில் புலிகளுக்கு சேதம் ஏற்பட்டதாக இராணுவம் கூறுகின்றது ஆனால் அவற்றை 'புலிகளின் குரல்' வானொலி மறுக்கின்றது.

அடிக்கடி இடம்பெறும் இத் தாக்குதல்களினால் வடக்கிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வருவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

—இவ்வாறு அச்செய்தியாளர் மேலும் தெரிவித்தார். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org